ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2158/41- 2020 ජනවාරි මස 17 වැනි සිකුරාදා - 2020.01.17

*2158/41 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44(5) ஆம் உறுப்புரைக்கமைய அமைச்சரவையில் உறுப்பினர் அல்லாத இராஜாங்க அமைச்சர்களுக்காக விடயங்கள் மற்றும் கடமைப்பொறுப்புகளை கையளிப்பதற்காக அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் பணிப்புரைக்கமைய,

நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சரின் பொறுப்பில் இருக்க வேண்டிய விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் 2020.01.06 ஆந் திகதி முதல் செயல்படும் வகையில் இங்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைந்திருக்க வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கலாநிதி (பொறி). பிரியத் பந்து விக்ரம,
செயலாளர்,
நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு
வசதிகள் அமைச்சு.

நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,
பத்தரமுல்லை,
2020, சனவரி 13.

**அட்டவணை**

**மாண்புமிகு காமினி லொக்குகே நகர அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகள் மற்றும் பணிகள்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. பெருநகர, உபநகர மற்றும், புறநகர் அபிவிருத்தித் திட்டங்களும் அபிவிருத்தியும் | 1. நகர அபிவிருத்தி அதிகார சபை | • (1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் |
| 2. நகர்ப்புறங்களின் பொருளாதாரம், சமூக மற்றும் பௌதிக அபிவிருத்திகளை ஒன்றிணைத்து விதிமுறையாக மேம்படுத்தலும் மற்றும் ஒழுங்குறுத்தலும் | 2. இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | • (1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் |
| 3. நகர்ப்புறத் திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் | | • (1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) இலங்கை காணி அபிவிருத்திச் சட்டம் |
| 4. தாழ் நிலங்களை நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை | | |
| 5. நகர்ப்புற பிரதேசங்களில் அமைந்துள்ள சேவைகள் மற்றும் வசதிகள் குறைந்த பிரதேசங்கள் மற்றும் சதுப்பு நிலங்களைப் பொதுத் திட்டமொன்றுக்கமைய அபிவிருத்தி செய்வதற்கு தேவையான வழிகாட்டல் | | |

**மாண்புமிகு வாசுதேச நாணாயக்கார, நீர்வழங்கல் வசதிகள் இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகள் மற்றும் பணிகள்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. ஒவ்வொரு பிரசைக்கும் சுத்தமான குடிநீர் வழங்கப்படுவதை உறுதிப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | 1. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | • (1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க) தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம் |
| 2. நீர்வழங்கல் சேவைகள், வடிகாலமைப்பு முறைமைகள், துப்புரவேற்பாட்டு வசதிகள் குறித்த ஆய்வு, திட்டமிடுகை, உருவாக்குகை, நிர்மாணிப்பு, நெறிப்படுத்துகை, பராமரிப்பு | 2. தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம் | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**மாண்புமிகு வாசுதேச நாணாயக்கார, நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகள் மற்றும் பணிகள்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 3. சமூக நீர்வழங்கள் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டங்களை வினைத்திறமையாகவும், முறைாகவும் நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | | |

**மாண்புமிகு இந்திக்க அனுருத்த, வீடமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகள் மற்றும் பணிகள்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. குறைந்த வருமானம் பெறுநர்கள் மற்றும் விசேட சமூகக்குழுக்கள் அடங்கலான பொதுமக்களின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திட்டங்களையும் வீடமைப்பு நிதியுதவி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துதல் | 1. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை | • (1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் |
| 2. சூழல் நேயமிக்கதாக செலவுக்கேற்ற நலன்களைப் பெற்றுத்தரும் (Cost-effective) வீடமைப்பு தொழில்நுட்ப முறை பற்றி கிராமிய மக்களுக்கு வழிகாட்டுதல் | 2. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை | • (2008 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க) நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் |

01 - 748

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.